(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

மாதிரி விண்ணப்பப் படிவம்

# அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க தொழில்நுட்ப அலுவலர்களுக்கான (சிவில் / எந்திரவியல்) எழுத்துப் பரீட்சை – 2010/(2019)

# Written Examination for Technical officers (Civil/Mechanical) in the Public and Provincial Public Services - 2010/(2019)

**பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஊடகமொழி**
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடவும்)

**தோற்றுவதற்கு எதிர்ப்பார்க்கும் பரீட்சை**

சிவில் - 1
எந்திரவியல் - 2
(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடவும்)

**பரீட்சை மட்டம்**
1 ஆவது பரீட்சை – 1
2 ஆவது பரீட்சை – 2
3 ஆவது பரீட்சை – 3
(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடவும்)

**கவனிக்கவும்: விண்ணப்பதாரியொருவருக்கு ஒரு பரீட்சை மட்டத்திற்கு மாத்திரமே தோற்ற முடியும். (பிரமாணக் குறிப்பு 6 01(IV) இற்கு அமைய)**

01 1.1 முழுப் பெயர்(ஆங்கில கெப்பிடல் எழுத்தில)…………………………………………………………………...

( உதாரணம்:- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களை பின்னால் இட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல்எழுத்தில்):……………………………………………………………………………........
(உதாரணம்:- GUNAWARDHANA. H.M.S.K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :…………………………………………………………………………..

……………………………………………………………………………………………………………………

02. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்):…………………………………………………………...

……………………………………………………………………………………………….......................

2.2 அனுமதியட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)……………………………….

……………………………………………………………………………………………...

03. 3.1 ஆண்/பெண் :

ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டில்இடவும்)

3.2 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

3.3 தொலைபேசி இலக்கம்: செல்லிடத்தொலைபேசி

நிலையானது

04. நீங்கள் இப்பரீட்சைக்கு தோற்ற எதிர்ப்பார்க்கும் பாடங்கள் (பாடங்கள் மற்றும் அவற்றுக்குரிய இலக்கங்கள் கீழுள்ளவாறு குறிப்பிடல் வேண்டும்).
கவனிக்கவும் :- பிரமாணக் குறிப்பு 16.02 இற்கு அமைய விண்ணப்பதாரிகளால் கட்டாய பாடங்கள் மற்றும் தெரிவுப் பாடங்களுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். மேலதிக தெரிவுப் பாடங்களுக்கு விண்ணப்பிக்க முடியாது.

| | பாடங்கள் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | ...................................................................... | .......................... |
| 2. | ...................................................................... | .......................... |
| 3. | ...................................................................... | .......................... |
| 4. | ...................................................................... | .......................... |
| 5. | ...................................................................... | .......................... |
| 6. | ...................................................................... | .......................... |
| 7. | ...................................................................... | .......................... |

05. 5.1 விண்ணப்பதாரி தற்போது பணிபுரியும் திணைக்களம்/நிறுவனம் :-

..........................................................................................................................................................

5.2 காரியாலய முகவரி :- ..........................................................................................................................

(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)

5.3 தொலைபேசி இலக்கம் : 

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

5.4 தொலைநகல் : 

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

06. சேவை விபரம்:-

(I) தற்போது வகிக்கும் பதவி :-.............................................................................................

(II) தரம்/வகுப்பு :- ..........................................................................................................

(III) முதல் நியமனக் கடித இலக்கம் மற்றும் திகதி :- ..........................................................

(IV) நியமனமானது நிரந்தரமாக்கப்பட்ட திகதி :.......................................................................

(V) இப்பரீட்சையில் நீங்கள் சித்தி பெற்றால், அடுத்து எதிர்ப்பார்க்கும் பதவி உயர்வுக்காக தரம்/வகுப்பு

..................................................................................................................

07. 7.1 நீங்கள் தோற்ற விரும்பும் பரீட்சையின் தரம் / வகுப்பு..........................................

7.2 அத்தரம் / வகுப்பு , சிவில்/எந்திரவியல் ஆகியவற்றில் எத்துறையைச் சார்ந்தது ? :- ...............................

08. முந்திய சந்தர்ப்பமொன்றில் இப்பரீட்சைக்கு நீங்கள் தோற்றியிருப்பன் இப்பரீட்சை நடைபெற்ற ஆண்டு, மாதம், பரீட்சைச் சுட்டெண், சித்தியடைந்த பாடங்கள் என்பவற்றைக் குறிப்படுக

..........................................................................................................................................

..........................................................................................................................................

09. நீங்கள் இலக்கம 04 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கு முதன் முறையாக தோற்றுபவரா? ..........................................................................................................................................

10. பரீட்சைக் கட்டணம் : ரூபா:..............................

10.1 செலுத்திய தபால்/உபதபால் காரியாலயம் :………………………………………

10.2 செலுத்திய தொகை :………………………….

10.3 செலுத்திய திகதி :………………………….

10.4 பற்றுச்சீட்டு இலக்கம் :………………………..

| |
|---|
| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு கழறாதவாறு ஒட்டி விடவும் |

11. 11.1 இந்த விண்ணப்பத்திலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கெட்டியவரை உண்மையானவை என்றும் சரியானவையென்றும் உறுதிப்படுத்திகிறேன்.

11.2 பரீட்சைக்குரிய பரீட்சைக் கட்டணம் ரூபா ………………….செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை இணைத்துள்ளேன் என்பதை உறுதி செய்கிறேன்.

11.3 இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையற்றவனாகப் பரீட்சைக்கு முன்பு,பரீட்சை நடைபெறுகையில் அல்லது அதற்குப் பின்பு கண்டு பிடிக்கப்பட்டால்,எனது பரீட்சார்த்தித் தகைமை இரத்துச் செய்வதற்கு, பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்குள்ள அதிகாரத்தை முற்றிலும் ஏற்றுக்கொள்கின்றேன். மேலும் பரீட்சை தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் நியதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படுவதற்கும் இணங்குகிறேன்.

11.4 மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேற்றை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு முழுவதுமாக கட்டுப்படுவதாக உறுதி கூறுகிறேன்.

திகதி :- ......................................

........................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

---

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வண்ணப்பப்படிவத்திலே இல. 4, 5 மற்றும் 6 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும் இப்பரீட்சையுடன் தொடர்புள்ள பிரமாணங்களிலே வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் பரீட்சார்த்தி தகைமையுள்ளவர் என்றும், இம்முறை விண்ணப்பித்திருப்பது 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய தரத்திற்கு/வகுப்பிற்கான பரீட்சைக்கு மாத்திரம் என்பதையும், பரீட்சைக்குரிய பரீட்சைக் கட்டணமானது செலுத்தப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் உறுதி செய்கிறேன்.

.............................................................................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை

திகதி : ................................................

எனது எண் : 5/5/2/GTO/2018 (2019)
ஒழுங்கமைப்பு (நிறுவனம்சார் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்ல.
2019.01. ஆம் திகதி.

சகல அமைச்சுக்கள், திணைக்களம், கூட்டுத்தாபனம், சபை,
தலைமை அதிகாரிகளுக்கும்,
மாகாண அரச சேவை ஆணைக்குழு செயலாளர்களுக்கும்,
ஏனைய நிறுவன தலைவர்களுக்கும்,

## அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவை தொழில்நுட்ப அலுவலர்களுக்காக (சிவில் / எந்திரவியல்) நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சை - 2010 முதல் 2018 வரை

----------------------------------------------------------------------------------------------------------------------------------
-

மேற்குறிப்பிடப்பட்ட பரீட்சையை 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடாத்துவதற்கு ஒழுங்குகள செய்யப்பட்டுள்ளன. 2010 ஆம் ஆண்டு முதல் 2017 வரையிலான ஆண்டுகளுக்குரிய சகல பரீட்சைகளுக்கும ஏற்புடையவாறு மேற்படி பரீட்சை நடாத்தப்படவுள்ளது.

இது சம்பந்தமாக திருத்தப்பட்ட விண்ணப்பங்களும், பிரவேசப் பட்டியல்களும் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

02. இபபரீட்சை அறிவித்தலின் உள்ளடக்கத்தைத் தங்களது நிறுவனத்தில் இருக்கும், இத்துடன தொடர்புபட்ட சகல அலுவலர்களின் கவனத்திற்கும் கொண்டு வரவும்.

**03. I பரீட்சைகள் :**

இப் பரீட்சையானது 1 வது, 2 வது, 3வது, பரீட்சை என மூன்று பகுதிகளை உள்ளடக்குகிறது. கீழ்க்கண்ட தரங்களுக்கான பதவி உயர்வுக்குப் பொருத்தமானவர்களின் தெரிவு இப்பரீட்சையின் பெறுபேறுகளின்படி நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 1 வது பரீட்சை : (சிவில்) | - | துணைப் பரிசோதகர் தரத்திற்குப் பதவியேற்றம் |
| 1 வது பரீட்சை : (எந்திரவியல்) | - | உதவி முகாரி தரத்திற்குப் பதவியேற்றம். |
| 2 வது பரீட்சை : (சிவில்) | - | பரிசோதகர் தரத்திற்குப் பதவியேற்றம் |
| 2 வது பரீட்சை : (எந்திரவியல) | - | முகாரி தரம் II இற்குப் பதவியேற்றம் |
| 3 வது பரீட்சை : (சிவில்) | - | உதவிப் பொறியியலாளரின் தரத்திற்குப் பதவியேற்றம் |
| 3 வது பரீட்சை : (எந்திரவியல) | - | முகாரி தரம் I இற்குப் பதவியேற்றம் |

**II <u>ஒரு முறையில் ஒரு தரத்திற்கான பரீட்சைக்கு மட்டுமே ஒரு பரீட்சார்த்தி தோற்றலாம்.</u>**

**04.** <u>பரீட்சை நிலையங்கள்</u>
எழுதுதுப் பரீட்சைகள் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

**05.** <u>தகைமைகள்</u> **:** இப்பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும்,
(அ) அரசாங்க / கூட்டுத்தாபன / சபை / மாகாண / அரசாங்க சேவையில் நிரந்தர அலுவலராய் இருத்தல் வேண்டும்.

(ஆ) மேலே பந்தி 3 இல் குறிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு தரத்திற்குப் பதவியேற்றம் பெறுவதற்கு இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டியவராய் இருத்தல் வேண்டும். அல்லது ஆட்சேர்ப்பு / பதவியேற்றத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள வண்ணம் வினைத்திறமைகாண் தடையை தாண்டுவதற்கு இப்பரீட்சையில் சித்திபெறல் அவசியமாயிருத்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் மேற்குறிப்பிட்டுள்ள தகைமைகளை எய்தியுள்ளனர் என்பது பற்றி உரிய நிறுவனத் தலைவர் திருப்திகொள்ளல் வேண்டும்.

**06.** <u>விண்ணப்படிவங்களை</u> **:**

இப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் இப்பரீட்சை அறிவித்தலின் இறுதியல் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்படிவத்திற்கேற்ப **8" X 11"** அளவுகள் கொண்ட தாளில் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பங்களை தலைப்பு 01 முதல் 04 வரை முதல் பக்கத்திலும் மற்றவைகளை அடுத்த பக்கங்களில் வருமாறும் தமது கையெழுத்தினால் பூரணப்படுத்தி தங்களது நிறுவனத் தலைவர்களிடம் கையளித்தல வேண்டும். விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கும் பாடங்களைக் குறிப்பதற்கு இத்துடன் வழங்கப்படும் பாடப்பட்டியலை உபயோகிக்கவும். பிரவேசப் படிவங்கள் நிறுவனத் தலைவர்களினால் குறித்த திகதிக்கு முன் சமர்ப்பிக்கும் வகையில் தயாரிக்கப்பட வேண்டியிருப்பதால் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைப் போதிய கால அவகாசம் வைத்துத் தமது நிறுவனத் தலைவர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் நிறுவனத் தலைவர்கள் விண்ணப்பதாரிகளது விபரங்களை பிரவேசப் படிவங்களில் தயாரித்து உரிய விண்ணப்பப் படிவங்களை இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பது சம்பந்தமான பிரவேசப் படிவங்கள் நிறுவனத் தலைவர்களுக்கு வழங்கப்படும். விண்ணப்பப்படிவத்தில் தலைப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரானது, சிங்கள விண்ணப்பப்படிவங்களாயின் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களாயின் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

6.1 மேலே குறிப்பிட்டதற்கிணங்க இந்த பரீட்சையானது 03 தரங்களுக்கு உரிய 03 பரீட்சைகளாக இருப்பதால் நிறுவனத் தலைவர்கள் விண்ணப்பங்களைக் கவனமாக வகைப்படுத்தி உரிய பிரவேசப் படிவங்களில் உட்படுத்தி அதற்கான தழுவல் கடிதத்துடன் எனக்கு அனுப்புதல் வேண்டும்.

6.2 முறையாக பூர்த்தி செய்யப்பட்ட சகல விண்ணப்பங்களும் நிறுவனத் தலைவர்களினால் சிபாரிசு செய்யப்பட்டு பிரவேசப் படிவங்களுடன் இணைத்து **பதிவுத் தபாலில் 2019 பெப்ரவரி 22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்** கிடைக்கும் வண்ணம் **"பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்", ஒழுங்கமைப்பு (நிறுவனம்சார் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் த.பெ.இல 1503, கொழும்பு** என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

6.3 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

6.4 விண்ணப்பப்படிவத்துடன் எவ்வித ஆவணங்களோ சான்றிதழ்களோ இணைக்கப்படலாகாது.

6.5 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படல்.

கீழ்க்கண்டவாறு உள்ள விண்ணபபங்கள ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது:

(அ) பூர்த்தி செய்யப்படாத அல்லது பிழைகள் அடங்கிய அல்லது பரீட்சைகள் தொடர்பான பிரமாணங்களுக்கு அமையாத விண்ணப்பங்கள்.

(ஆ) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பங்கள்.

(இ) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் தினத்துக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள்.

(ஈ) சிவில் மற்றும் எந்திரவியல் ஆகிய இரு பரீட்சைகளுக்கும் விணணப்பித்துள்ள விண்ணப்பப்படிவங்கள் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட பரீட்சை மட்டங்களுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பப்படிவங்கள்.

6.6 மேற்குறிப்பிடப்பட்டுள்ள பிழைகளை தவிர்ப்பதற்காக வண்ணப்பப்படிவங்களை அனுப்புவதற்கு முன் அவை பரீட்சை அறிவித்தலிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதாக உள்ளதா என்பதையும், அனைத்து விடயங்களும் உள்ளடக்கியதாக சரியான முறையில் தயாரிக்கப்பட்டு, உரிய பரீட்சைக் கட்டணமானது செலுத்தப்பட்டு, விபரங்களை உட்படுத்திய பற்றுச்சீட்டானது சரயான முறையில் ஒட்டப்பட்டுள்ளதா என்பதையும் பரிசீலனை செய்து பார்க்கவும். மேலும் விண்ணப்பப்படிவம் மற்றும் பற்றுச்சீட்டின் நிழற் பிரதிகளை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

6.7 பொய்யான தகவல்களுக்கான தண்டனை

விண்ணப்பப்படிவங்களை மிகவும் கவனமாகவும், உண்மையான தகவல்களை உட்படுத்தியும் நிரப்புதல் வேண்டும். இப்பரீட்சையின் விதி முறைகளுக்கு அமைய யாதேனும் பரீட்சார்த்தி தகுதியற்றவர் என அறியப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய/அவளுடைய விண்ணப்பத்தை ரத்து செய்ய முடியும்.

**07 பரீட்சைக் கட்டணம்**

முதன் முறை பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படுவதிலிருந்து விலக்களிக்கப்படுவர். அதன் பின்னர் பரீட்சைக்குத் தோற்றும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்க் கண்ட முறையில் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

**எழுத்துப் பரீட்சைக்குரிய கட்டணம்**

| | | |
|---|---|---|
| ஒரு பாடத்திற்கு | - | ரூபா 300/- |
| இரு பாடங்களிற்கு | - | ரூபா 400/- |
| மூன்று பாடங்களிற்கு | - | ரூபா 500/- |
| நான்கு பாடங்கள் அல்லது அதற்கு மேல் | - | ரூபா 600/- |
| **செய்முறைப் பரீட்சைக்கு** | - | **ரூபா 1200 /-** |

செய்முறைப் பரீட்சைக்குரிய கட்டணம் பரீட்சார்த்தி செய்முறைப பரீட்சைக்குத் தோற்றும்போது செலுத்தப்படல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய விண்ணப்பதாரிகள், பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமான தலைப்பு 20-03-02-13 இன் கீழ் அரச வருமானத்திற்கு உட்பட்டதாக நாடு முழுவதிலுமுள்ள ஏதேனும் தபால்/உபதபால் நிலையத்தில் அல்லது மாவட்ட/பிரதேச செயலகத்தில் பணமாக செலுத்தி விண்ணப்பதாரிகளின் பெயரில் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி விட வேண்டும். இப்பரீட்சைக் கட்டணங்களுக்கு மேலதிகமாக எவ்வித அறவீடுகளும் இடம் பெறமாட்டாது என்பதை தயவுடன் அறியத்தருகிறோம். இப்பரீட்சைக்குரிய கட்டணமானது எக்காரணத்திற்காகவும் மீள் செலுத்துதல் அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றுதல் போன்றவை இடம் பெறமாட்டாது.

**குறிப்பு** : ஏற்கனவே பரீட்சைக் கட்டணம் செலுத்தி விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகள் மீண்டும் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. அது பற்றி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடவும். (கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை இணைக்கவும்)

**08. மொழி மூலம்**

இப்பரீட்சை சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுகின்றன. பரீட்சார்த்தி ஒருவர் தோற்றவிருக்கும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரு மொழியில் மாத்திரமே விடையளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு எச்சந்தர்ப்பத்திலேனும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**09. <u>அனுமதிப் பத்திரங்கள்</u>**

இப்பரீட்சை நடைபெறுவதற்குப் பதினான்கு நாட்களுக்கு முன் அறிவித்தலிலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம் என்ற முன் தீர்மானத்திற்கு அமைய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதி அல்லது அதற்கு முன் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுடன் சரியாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு, பரீட்சை ஆணையாளர் நாயகம் மூலம் விண்ணப்பப்படிவத்திலே குறிப்பிட்டுள்ள காரியாலய முகவரிக்கு அனுமதியட்டைகள் தபால் மூலம் அனுப்பப்படும். அனுமதியட்டைகள் அஞ்சலடப்பட்டது பத்திரிகை அறிவித்தலினூடாக மற்றும் பரீட்சைத் திணைக்கள இணையதளத்தினூடாக அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலானது வெளியிடப்பட்டு, 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்னரும் அனுமதியட்டை கிடைக்கவில்லையாயின் குறித்த நபர் மூலம் அல்லது நிறுவனத் தலைவர் மூலம் தாமதமின்றி கீழுள்ள தகவல்களுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு (நிறுவனம்சார் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள) கிளைக்கு அறிவிக்க வேண்டும். மேலும் பரீட்சார்த்தியொருவருக்கு அனுமதியட்டை வழங்கப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவியொன்றுக்கான தகைமைகளை கொண்டிருப்பதாக கருதப்படமாட்டாது.

01. பரீட்சையின் பெயர்
02. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்
03. முகவரி
04. தொலைநகல் மூலமாக அனுமதியட்டைப் பிரதியைப் பெறக்கூடியதான விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கம்.
05. நிறுவனத் தலைவர் விண்ணப்பத்தை அஞ்சல் செய்த திகதி, பதிவு எண், அஞ்சலகம் போன்றவற்றைக் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதமொன்றையும் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்ப வேண்டும்.

**10. <u>அடையாள அட்டைகள்</u>**

பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடப் பரீட்சையின் போதும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். இதற்கு கீழ்க் கண்ட ஆளடையாளப் பத்திரங்களில் எவையேனும் ஒன்றினைச் சமர்ப்பிக்கலாம்.

01. தேசிய ஆள் அடையாள அட்டை.
02. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
03. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

**11. கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சை அனுமதி அட்டை ஆகியவற்றில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். எல்லா விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரியினூடாக உறுதிப்படுத்தல் வேண்டும். மேலும் பரீட்சைக்கு தோற்றும் முதல் தினம் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தி அனுமதியட்டைகளை சமர்ப்பிக்க முடியும்.

**12. <u>பெறுபேறு</u>**

எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக் கொள்பவர்கள் மற்றும் தாம் தோற்றும் பாடங்களின் மொத்தப் புள்ளிகளின் சராசரி 45% அல்லது அதற்கு மேல் பெறும் பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளின் நிலையடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்ட பெறுபேறானது பரீட்சை ஆணையாளர் நாயகம் மூலம் பிரவேசப் படிவங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படும்.

**13. பாடத்திட்டம**

1979 ஆம் ஆண்டு முதல் செல்லுபடியாகும் வகையில் திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கமைய இப்பரீட்சைகள் நடாததப்படும். இப்பாடத்திட்டங்களின் பிரதிகள் எல்லா அமைச்சு / திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை ஆகியவற்றின் தலைவர்களுக்குக் கிடைக்கச் செய்யப்பட்டுள்ளது.

இப்பிரமாணங்களும் பாடத்திட்டங்களும் மீண்டும் பகிர்ந்தளிக்கப்பட மாட்டாதென சகல நிறுவனத் தலைவர்களுக்கும், பரீட்சார்த்திகளுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது. இச்சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படாத யாதொரு விடயம் பற்றியும் பரீட்சை ஆணையாளர் நாயகமே தீர்மானிப்பார். அவ்வாறே பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேற்றை வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். அவ்விதிமுறைகளை மீறினால் அவருக்கு பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

தங்களது நிறுவனத்தில் உள்ள இத்துறையுடன் தொடர்புபட்ட சகல அலுவலர்களுக்கும் இச்சுற்றறிக்கையின் உள்ளடக்கத்தைத் தயவு செய்து தெரியப்படுத்தவும்.

இது சம்பந்தமாக தங்களின் ஒத்துழைப்பை மிகவும் போற்றுகிறோம்.

**பீ. சனத் பூஜித**
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

# இணைப்பு

பாடத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஒவ்வொரு பரீட்சையிலும் சித்தி பெறுவதற்கு விண்ணப்பதாரிகள் இப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாட சித்திகள் பெறல் வேண்டும்.

**01. தோற்றவுள்ள பரீட்சை : சிவில் - (1)**

**1.1 1 ஆம் பரீட்சை (சிவில்) – துணைப்பரிசோதகர தரத்துக்கு பதவியேற்ற,**

**கட்டாய பாடங்கள் (கீழ் குறிப்பிடப்படும் அனைத்துப் பாடங்களும்)**

| | பாட எண் |
|---|---|
| 1. கணிதம் ( கீழ் மட்டம்) | 01 |
| 2. அளவு எடுத்தல் (கீழ் மட்டம்) | 02 |
| 3. அளத்தல் மற்றும் மட்டம் எடுத்தல் (கீழ் மட்டம்) | 03 |
| 4. திட்டத் வரைதல் மற்றும் பிரதி எடுத்தல் | 04 |

**மற்றும்**

**தெரிவுப் பாடங்கள் : கீழ்க் குறிப்பிடப்படும் பாடங்களில் ஏதேனும் மூன்று பாடங்கள்**

| | |
|---|---|
| 5. அடிப்படை கட்டட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு | 05 |
| 6. நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு | 06 |
| 7. பணியிடக் கட்டுப்படுத்தல் | 07 |
| 8. வீதியமைப்பு மற்றும் பராமரிப்பு | 08 |

**1.2 2 ஆம் பரீட்சை (சிவில்) – பரிசோதகர் தரத்துக்கு பதவியேற்ற கட்டாய பாடங்கள்:**

| | |
|---|---|
| 1. கணிதம் (மேல் மட்டம்) | 21 |
| 2. அளவு எடுத்தல் (மேல் மட்டம்) | 22 |
| 3. அளத்தல் மற்றும் மட்டம் எடுத்தல் | 23 |
| 4. வரைதல் | 24 |

**மற்றும்**

**தெரிவுப் பாடங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் பாடங்களில் ஏதேனும் மூன்று பாடங்கள்**

| | |
|---|---|
| 5. கட்டட நிர்மாணம் (மேல் மட்டம்) | 25 |
| 6. நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு | 26 |
| 7. வீதியமைப்பு மற்றும் பராமரிப்பு | 27 |
| 8. பாலங்கள் மற்றும் பாரிய கட்டுமானங்கள் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு | 28 |
| 9. வேலை ஒழுங்கமைப்பு | 29 |

**1.3 3 ஆம் பரீட்சை (சிவில்) : துணைப் பொறியியலாளர் தரத்துக்கு பதவியேற்ற கட்டாய பாடங்கள்**

| | |
|---|---|
| 1. சிவில் பொறியியல் I | 41 |
| 2. சிவில் பொறியியல் III | 44 |
| 3. சிவல் பொறியியல் IV | 45 |
| 4. கட்டட அளவீடுகள் மற்றும் கட்டட மதிப்பீடு | 46 |
| 5. கட்டடவியல் வரைதல் | 47 |
| 6. அளத்தல் மற்றும் மட்டம் எடுத்தல் | 48 |

**மற்றும்**

**தெரிவுப் பாடங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் பாடங்களில் ஏதேனும் ஒரு பாடம்**

| | |
|---|---|
| 7. சிவில் பொறியியல் II | 42 |
| 8. வீதியமைப்பு மற்றும் பராமரிப்பு | 43 |

**02. தோற்றவுள்ள பரீட்சை : எந்திரவியல் - (2)**

**2.1 துணைமுகாரி தரத்துக்கு பதவியேற்ற கட்டாய பாடங்கள்**

| | |
|---|---|
| 1. கணிதம் (கீழ் மட்டம்) | 01 |
| 2. எந்திர அளவு இயல் | 09 |
| 3. எந்திர வரைவு மற்றும் பிரதி செய்தல் | 10 |
| 3. பட்டறை பயிற்சி | 11 |
| 4. செய்முறை வேலை (பொருத்துகை, தச்சு முதலியன) | 12 |
| 5. அளத்தல் மற்றும் மட்டம் எடுத்தல் (செய்முறை) | 13 |

**2.2 2 ஆம் பரீட்சை ( எந்திரவியல்) – முகாரி II ஆம் தரத்திற்கு பதவியேற்ற கீழ்க் குறிப்பிடப்படும் அனைத்துப் பாடங்களும் கட்டாய பாடங்களாகும்.**

| | |
|---|---|
| 1. கணிதம் (மேல் மட்டம்) | 21 |
| 2. எந்திரவியல் அளவு எடுத்தல் (உயர் மட்டம்) | 30 |
| 3. எந்திரவியல் வரைதல் மற்றும் பிரதியெடுத்தல் (மேல் மட்டம்) | 31 |
| 4. தொழிற்சாலை பயிற்சி | 32 |

**2.3 3 ஆம் பரீட்சை (எந்திரவியல்) – முகாரி I ஆம் தரத்துக்கு பதவியேற்ற கீழ்க் குறிப்பிடப்படும் அனைத்துப் பாடங்களும் கட்டாய பாடங்களாகும்.**

| | |
|---|---|
| 1. எந்திரவியல் பொறியியல் I | 49 |
| 2. எந்திரவியல் பொறியியல் II | 50 |
| 3. எந்திரவியல் பொறியியல் III | 51 |
| 4. பொறியியல் பொருளியல் | 52 |
| 5. எந்திரவியல் பொறியியல் - வரைதல் | 53 |